11.03.2021 CC. 4/2019 வா.சா.2- S.மதுபாலன் , துணைமேலாளர், **SBI**, **மேட்டுர் மு.வி.**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

நான் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, மேட்டுர் கிளையில் துணை மேலாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து மேலாளருக்கு அழைப்பாணை வந்ததின் பேரில், என்னை சாட்சி சொல்ல மேலாளர் நியமித்ததன் பேரில் நான் இன்று சாட்சி கூற வந்துள்ளேன். எங்கள் வங்கியில் MKS பேப்ரிகேட்டர்ஸ் சையத் முஸ்தபா என்பவர் வங்கி கணக்கு வைத்துள்ளார். அது நடப்பு கணக்கு ஆகும். அவர் மேற்படி அவரது கணக்கில் 9.11.18 ம் தேதி அன்று ரூ.11,40,292/- 20.8.18 ம் தேதிய காசோலை எண்.798506 என்ற காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 காசோலைதான் நான் மேற்படி கூறிய காசோலை ஆகும். மேற்படி காசோலையானது 12.11.2018 ம் தேதி அன்று போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டுவிட்டது. வா.சா.ஆ.3 காசோலை திருப்பப்பட்ட மெமோ ஆனது எங்கள் வங்கியால் வழங்கப்பட்டதுதான். வா.சா.ஆ.4 எங்கள் வங்கிக்கான புகார்தாரரின் வங்கிக்கணக்கு விவரம் என்றால், சரிதான். 27.8.2018 ம் தேதி அன்று புகார்தாரரின் மேற்படி கணக்கிற்கு NEFT மூலம் யூனியன் பேங்க் ஆப் இந்தியாவில் இருந்து ரூ.6 லட்சம் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். போதிய பணம் இல்லை என காசோலை திருப்பப்பட்டதற்காக காசோலை திருப்பப்பட்ட பதிவேட்டின் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன். அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. அந்த ஆவணம் வா.சா.ஆ.8 ஆகும். 1.1.2018 முதல் 31.12.19 வரையிலான புகார்தாரரின் வங்கி கணக்கு விவரங்களை கொண்டு வந்துள்ளேன். அந்த ஆவணம் வா.சா.ஆ.9 ஆகும்.

**குறுக்கு விசாரணை** - செய்யப்படவில்லை.